**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் - 2019**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 மற்றும் 1.6 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 32 ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 5,955,978 தொகையான கணக்கீட்டுத் தவறுகள் காரணமாக ஏற்பட்ட வரவு மீதிகள் செலுத்த வேண்டிய முகவர் தரகுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக செலுத்த வேண்டிய முகவர் தரகு மீதி ரூபா 95,826,492 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இக் கணக்கு கட்டுப்பாட்டுக் கணக்கொன்றாக உள்ளதன் காரணமாக முகவர் தரகு கணக்கில் வரவு மற்றும் செலவு பதிவுகள் இரண்டும் உள்ளடக்கப்படுகின்றன. ஆகையால் வரவு அல்லது செலவு மீதி தேறிய பெறுமதியாக காணப்படுகின்றது. | கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் 9 ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 204,516,673 தொகையான இருப்புக்கள் தேறக்கூடிய நிகரப் பெறுமதி மதிப்பிடப்படாமல் நிதிக்கூற்றுக்களில் கிரயத்தில் காண்பிக்கப்பட்டிருந்தன. குறித்த இருப்பில் ரூபா 346,198 தொகையான பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத ரோணர் இருப்பு மற்றும் ரூபா 80,432 தொகையான அசைவற்ற சீடிக்கள் (CDs) மற்றும் ரோணர் இருப்பு என்பன உள்ளடங்கியிருந்தன. | இவ் இருப்பு நுகர்வு நோக்கத்திற்காக மாத்திரமே காணப்பட்டது. ஆகையால் இவ் இருப்பிற்கு தேறக்கூடிய நிகரப் பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் இடம்பெறும் அகற்றல் நடவடிக்கைகளின் போது இருப்பிலிருந்து பயன்படுத்த முடியாத மற்றும் அசைவற்ற இருப்புக்களின் பெறுமதிகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 844,120,000 தொகையான இழப்பீட்டை கோரி வெவ்வேறு தரப்பினர்களால் நீதிமன்றத்தில் 10 வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதிலும் இது இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 12 ஆம் பக்கத்தில் குறிப்பு 3.11 நிகழத்தக்க பொறுப்புக்களின் கீழ் வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் பெறுமதி காட்டப்பட்டிருந்தன. | கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் 118(இ) பந்திக்கு முரணாக அருவச் சொத்துக்களின் கிரயத்திற்குப் பதிலாக அச் | இவ் விபரங்கள் நிதிக்கூற்றுக்களின் 157 மற்றும் 158 ஆம் பக்கங்களில் உள்ள | கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் தேறிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் திரண்ட காலக்கழிவுப் பெறுமதியும் அதேபோல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பட்டியல்களின் xxxviii ஆம் இலக்கத்தின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் இது பொழிப்பாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் பிரகாரம் லங்கா புவத் லிமிட்டட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,104,000 தொகையான முதலீடு நிதிக்கூற்றுக்களில் கிரயத்தில் காட்டப்பட்டிருந்ததுடன் முதலீடு அதிகரித்தல் அல்லது குறைவடைதலினை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | லங்கா புவத் தற்போது செயற்பாட்டில் இருக்காததன் காரணமாக முதலீட்டின் பெறுமதி வரலாற்றுக் கிரய முறையின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் முதலீடு நியாயப் பெறுமதிக்கு மதிப்பிடப்பட முடியாதிருந்தது. | கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இன் பிரகாரம் ரூபா 3,315,949,586 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் தற்போதும் பயன்பாட்டிலுள்ள சொத்துக்களின் நியாயப் பெறுமதியை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் மாதத்தில் கூட்டுத்தாபனத்திற்கு நிதி மானியங்களாக ரூபா 100 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்த போதிலும் அது அவ் ஆண்டின் போது காலக்கழிவிடப்பட்டிருக்காததுடன் 2016 ஆம் ஆண்டின் போது மானியங்களாக பெறப்பட்டிருந்த ரூபா 11.5 மில்லியன் பெறுமதியான வாகனமொன்று | 2016 ஆம் ஆண்டில் மானியங்களாக ரூபா 11.5 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் பெறப்பட்டதுடன் இது அவ் ஆண்டில் காலக்கழிவிடப்பட்டிருந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 100 மில்லியன் தொகை சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக | காலக்கழிவிற்கான கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க காலக்கழிவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அது பெறப்பட்டிருந்த திகதியிலிருந்து காலக்கழிவிடப்பட்டிருந்தது. மானியத்தின் காலக்கழிவிற்காக கூட்டுத்தாபனத்தால் பின்பற்றப்பட்ட கொள்கைகள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக காலக்கழிவின் சரியானதன்மையை பரீட்சிக்க முடியாதிருந்தது. | காணப்பட்டதுடன் அத்தகைய சொத்துக்கள் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக நடைமுறையொன்றை பின்பற்றுவதற்கு சில காலங்கள் எடுக்கும். ஆகையால் அத்தகைய சொத்துக்கள் 2019 ஆம் ஆண்டில் காலக்கழிவிடப்பட்டிருந்தன. | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வங்கி சேமிப்புக் கணக்கொன்றின் கொடுக்கல்வாங்கல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையொன்றாக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக நிதி நிலைமைக் கூற்றின் வங்கி மற்றும் காசு மீதிக்கும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான காசுப்பாய்ச்சல் கூற்றின் காசும் காசுக்குச் சமமானவைக்கும் இடையே ரூபா 1,097,793 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வைப்பொன்றாக வங்கி சேமிப்புக் கணக்கில் காணப்பட்ட பெறுமதி நிதிக்கூற்றுக்களின் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டின் கீழ் பல ஆண்டுகளாக காட்டப்படுகின்றது. | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது காசும் காசுக்குச் சமமானவையாக வங்கி கணக்கு மீதிகள் கருதப்படுகின்றதன் காரணமாக இத் தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) ரூபா 14,380,324 பெறுமதியான 6 மாதங்களிற்கு மேற்பட்ட காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக காசுப்புத்தகத்தின் மேலதிகப்பற்று மீதி ரூபா 14,380,324 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் கடன்கொடுத்தோர் மீதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | உரிய காசோலைகள் இரத்துச் செய்யப்பட வேண்டியதுடன் காசுப்புத்தகம் மற்றும் கடன்கொடுத்தோர் மீதி திருத்தம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 100 மில்லியன் அரசாங்க மானியத்தை பயன்படுத்தி அலைவரியை புனரமைப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தால் ரூபா 75,167,126 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் னொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் பெறுமதி மீதான காலக்கழிவினை கணிப்பீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 100 மில்லியன் மொத்த அரசாங்க மானியத்தின் மீது காலக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக ஏனைய வருமானம் ரூபா 13,454,279 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அரசாங்க மானியம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது அவற்றின் வரியற்ற பெறுமதி சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனினும் பெறப்பட்ட மொத்த மானியத்திற்குரிய பெறுமதிக்கு காலக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உபகரணத்தின் பெறுமதி மாத்திரம் மூலதனமாக்கப்பட வேண்டியதுடன் அத் தொகை மீது காலக்கழிவு கணிப்பிடப்பட வேண்டும். |

## 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 3,613,433,155 தொகையாக காணப்பட்டதுடன் உப பதிவேடுகளின் பிரகாரம் இது ரூபா 3,600,481,712 தொகையாக காணப்பட்டது. ஆகையால் ரூபா 12,951,413 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை | வேறுபாட்டிற்கான காரணங்கள் சரிபார்க்கப்பட்ட பின்னர் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.5.5 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக | பதில் வழங்கப்படவில்லை. | சாதகமான நிதி முகாமைத்துவமொன்று அமுல்படுத்தப்பட வேண்டும் |

குறைவடைந்திருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் தேறிய சொத்துக்கள் அதிகரித்து 2019 ஆம் ஆண்டில் குறைவடைந்திருந்தன. ஆகையால் திறைசேரி அல்லது அரசாங்கத்தின் நிதி உதவியின்றி கூட்டுத்தாபனம் தொடந்தியங்குவது நிச்சயமற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**1.5.6 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | செலுத்த வேண்டிய முகவர் தரகு | 95,826,492 | வயதுப் பகுப்பாய்வு | அடுத்த ஆண்டில் இதனை சமர்ப்பிக்க முடியும். | சான்றாக உறுதிப்படுத்தல் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | அறவிட முடியாத கடன்பட்டோர் மீதிகள் | 80,062,377 | இது அறவிடப்பட முடியாதிருந்ததென நிரூபிப்பதற்கான உறுதிப்படுத்தல்கள் | பதில் வழங்கப்படவில்லை. | அறவிட முடியாதவையாக கடன்பட்டோரை இனங்காண்பதற்கான காரணங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். |
| (இ) | முதலீடுகள் (லங்கா புவத்) | 1,104,000 | பங்குச் சான்றிதழ்கள் | பதில் வழங்கப்படவில்லை. | பங்குச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் கடன் கொள்கையின் பிரகாரம் கடன் காலப்பகுதி ஒரு மாதமாக காணப்பட்ட போதிலும் அக் காலப்பகுதியை விஞ்சிய கடன்பட்டோர் மீதி ரூபா 414,301,517 தொகையாக உள்ளதுடன் இது மொத்தக் | கடன் அறவீட்டுக் காலப்பகுதி ஒரு மாதமாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கடன்களை அறவீடு செய்வதற்காக இத் துறையிலுள்ள ஏனைய போட்டியாளர்களிற்கு இரண்டு மாதங்களிற்கு அதிகமான | கடன்பட்டோர்களிடமிருந்து தாமதமின்றி அறவீடுகளை மேற்கொள்வதற்கும், தாமதமான காலப்பகுதி மீது தண்டப்பணங்களை விதிப்பதற்கும் தாமதமின்றி சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | கடன்பட்டோரில் 80 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதில் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 83,401,301 தொகையாக உள்ளதுடன் மொத்தக் கடன்பட்டோரில் 16 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. | காலப்பகுதியொன்று வழங்கப்படுகின்றது. ஆகையால் கூட்டுத்தாபனம் முறையொன்றை அவ்வாறு பின்பற்ற வேண்டியிருந்தது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன்பட்டோர் மீதியில் 50 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 260,810,285 தொகை ரூபா 5 மில்லியன் பெறுமதியை விஞ்சிய 14 கடன்பட்டோர்களுடன் செய்துகொள்ளப்பட்ட 24 உடன்படிக்கைகளை உள்ளடக்கியிருந்தது. அம் மீதியில் 2014 ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை தொடர்பாக தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10 மில்லியன் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் முறையான உடன்படிக்கை காணப்படாததன் காரணமாக அறவிடும் தன்மை நிச்சயமற்றதாக இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. | ரூபா 10 மில்லியனை அறவீடு செய்வது தொடர்பான விடயம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களிற்கு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இரண்டு நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களாக காணப்படுவதன் காரணமாக கலந்துரையாடல் ஒன்றினூடாக தீர்வொன்றை பெற்றுக்கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் பெறப்பட்டிருந்தன. அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகளிற்காக வெகுஜன ஊடக அமைச்சிற்கு குறிப்பிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரால் தலைமைதாங்கப்பட்ட கூட்டத்தில் அந் நடவடிக்கை வங்கியின் எழுத்துமூலமான அங்கீகாரமொன்றுடன் மேற்கொள்ளப்பட்டிருக்காததன் காரணமாக கொடுப்பனவு மேற்கொள்ள முடியாதிருந்ததென சேமிப்பு வங்கியின் உயர் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் கூறியிருந்தார். | கடன்களை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வாடிக்கையாளர்களுடனான முறையான உடன்படிக்கைகள் காணப்படாமை மற்றும் அவர்களது முகவரிகளை | பதில் வழங்கப்படவில்லை. | கடன்களை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கண்டுபிடிக்க முடியாதிருந்தமை காரணமாக ரூபா 1,382,015 பெறுமதியான 05 கடன்பட்டோர் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் போது 100 சதவீத நட்டக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 518,315,788 கடன்பட்டோர் மீதியில் ஐந்து ஆண்டுகளை விஞ்சியிருந்த மீதி ரூபா 83,401,301 ஆக இருந்ததுடன் 25 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா 21,590,763 தொகைக்கு மாத்திரமே அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | கடன்களை மேலும் அறவீடு செய்வதற்கு விசேட கவனம் செலுத்தப்படும். | கடன்களை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தமை, அறவீடு செய்ய வேண்டிய தொகை போதியளவாக காணப்படாதமை, காலாவதியாகியிருத்தல் அல்லது மேலதிகமாக பட்டியலிடப்பட்டமை போன்ற காரணங்களினால் பதிவளிப்பதற்கு பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 21,461,907 தொகை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 518,315,788 கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அம் மீதியை பதிவளிப்பதற்கு 2016 ஆகஸ்ட் 24 இல் பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி கோரப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுமுயற்சிகள் திணைக்களத்திடம் மீண்டும் விசாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 1969 இன் 68 ஆம் இலக்க காலாவதியாகுதல் அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் 6 ஆண்டு காலப்பகுதி கடந்திருந்த போதிலும் 114 கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 72,679,947 தொகையை கடன் கொடுக்கல்வாங்கல் காலாவதியாவதற்கு முன்பு அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கடன்களை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 518,315,788 மீதியை உறுதிப்படுத்துவதற்கு கடன்பட்டோர்களிடமிருந்து மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உறுதிப்படுத்தல் கடிதங்களை அனுப்புதல் கொஞ்சம் தாமதமடைந்திருந்ததுடன் இந் நேரத்தில் அக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்தன. | அனைத்துக் கடன்பட்டோர்களிடமிருந்தும் மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்கான மீள் வியாபார கொடுக்கல் வாங்கல்கள் (contra deal) தொடர்பான ரூபா 3,520,954 செலவு மீதியொன்று 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 19,598,603 செலவு மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. குறித்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக சேவைநாடுநர்களுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன் அச் சேவைநாடுநர்களிடம் கோரமுடியாதிருந்தது. எனினும் அத் தொகையை வருமானத்திற்கு எடுப்பதற்கான அதிகாரம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கோருவதற்கான சட்ட ரீதியான உரிமைகளை இழப்பதன் காரணமாக 06 ஆண்டுகள் காலாவதியான பின்னர் வருமானத்திற்கு அத்தகைய மீதிகளை செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வருமானத்திற்கு கோருவதற்கான உரிமையை இழந்த மீதிகளை செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| | ரூபா | | |
| (அ) இலங்கை சனனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 155<br>2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட 26 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | | பதில் வழங்கப்பட்டிராத அனைத்துக் கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் உடனடியாக பதிலளிப்பதற்கு சாத்தியமானவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371 இன் (2)(ஆ) பிரிவு | | | |
| • ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய செயல்நிமித்த கட்டுநிதி எல்லை ரூபா 100,000 இனை விஞ்சி 12 சந்தர்ப்பங்களின் போது செயல்நிமித்த கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. | 6,944,462 | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய முற்பணத் தொகை ரூபா 100,000 ஆக காணப்பட்ட போதிலும் கூட்டுத்தாபன வேலையின் தன்மை காரணமாக குறித்த எல்லையை விஞ்சி முற்பணங்கள் வழங்கப்பட வேண்டியிருந்தன. | திருத்தப்பட்ட நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| • Srilakapiri aurudusiri நிகழ்ச்சித்திட்டத்திற்காக 12 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 3,075,650 தொகையான முற்பணங்கள் 02 | 3,075,650 | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய முற்பணத் தொகை ரூபா 100,000 | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| நாட்கள் தொடக்கம் 192 நாட்கள் வரையான காலதாமதத்துடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | | ஆக காணப்பட்ட போதிலும் கூட்டுத்தாபன வேலையின் தன்மை காரணமாக குறித்த எல்லையை விஞ்சி முற்பணங்கள் வழங்கப்பட வேண்டியிருந்தன. இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் அங்கீகாரத்திற்காக திறைசேரிக்கு குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (iii) நிதிப்பிரமாணம் 396 காசோலையொன்றின் செல்லுபடியாகும் காலப்பகுதி காலாவதியாகும் போது அக் காசோலை இரத்துச் செய்யப்பட வேண்டியதுடன் அத் தொகை செலுத்த வேண்டிய கடனொன்றாக கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். எனினும் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 44,388,037 | அக்காசோலையின் பெறுமதி மொத்தமாக நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் | | | |
| (i) 2003 சனவரி 01 ஆம் திகதிய பிஈடி/04 ஆம் இலக்க சுற்றிக்கை<br><br>2011 ஏப்ரல் 29 ஆம் திகதிய பிஈடி/58 ஆம் இலக்க சுற்றிக்கை<br><br>2015 யூன் 17 ஆம் திகதிய பிஈடி 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை ஏற்பாடுகளை கருத்தில் கொள்ளாமல் உரித்துள்ள படிக்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் தலைவரிற்கு 759.07.00(i) ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் மூலம் 2010 செப்தெம்பர் 07 ஆம் திகதியிலிருந்து ரூபா 30,000 தொகையான மேலதிக உபசரணைப் படியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் இது அன்று தொடக்கம் நாளது வரை மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. | 3,223,064 | தலைவரின் மாதாந்தப் படி போதாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2010.10.01 இலிருந்து ரூபா 30,000 படியொன்று செலுத்தப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |
| | • 2.3 ஆம் பந்தி<br>எம்எம் மற்றும் ஜேஎம் வகுதிகளில் உள்ள எரிபொருள் மற்றும் போக்குவரத்து படிகளிற்கு உரித்தற்ற 137 உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | 10,208,104 | கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இச் சலுகை வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்ச்சியாக வழங்கப்பட்டிருந்தது. பொதுத் திறைசேரியுடன் கலந்துரையாடலை மேற்கொண்ட பின்னர் முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | • 3.2 ஆம் பந்தி<br>2019 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரால் 3,547 லீற்றர் எரிபொருளும் செயற்பாட்டு பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) ஆகியோரால் 447 லீற்றர் | 645,422 | தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தால் பயன்படுத்தப்பட்ட மேலதிக எரிபொருள் பயன்பாட்டிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. பணிப்பாளரினால் (சந்தைப்படுத்தல்) பயன்படுத்தப்பட்ட மேலதிக எரிபொருள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | எரிபொருளும் முறையான அங்கீகாரமின்றி பெறப்பட்டிருந்தன. | | பயன்பாடு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 1990 மே 18 ஆம் திகதிய 26/90 ஆம் இலக்க சுற்றிக்கை அரசாங்க செயற்பாடுகளில் மதுபானம் வழங்கப்படக் கூடாத போதிலும் கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் நடைபெற்ற Nawyakaranaye Abhimangalya நிகழ்ச்சித்திட்டத்தின் போது மதுபான விருந்துபசாரமொன்று (cocktail reception) நடாத்தப்பட்டிருந்தது. மேலும் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஹோட்டலை தெரிவுசெய்வதற்காக அரசாங்க பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | 1,700,675 | ஒரே துறையிலுள்ள ஏனைய போட்டியாளர்களுடன் போட்டியிடும் போது ஊடக நிறுவனமொன்றாக செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 1998 இன் 74 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க தேசிய அரச பேரவையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அதிகாரச்சட்டம் 2018/2019 ஆம் ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் சமர்ப்பிக்க வேண்டிய 11 நிறைவேற்று உத்தியோகத்தர்களால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | 11 உத்தியோகத்தர்களில் 3 உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து பதவிவிலகியிருந்ததுடன் ஏனைய உத்தியோகத்தர்களிற்கு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்தால் பேணப்பட்ட இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட மேலதிகப்பற்று எல்லை விஞ்சப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மேலதிகப்பற்றிற்கான வட்டியாக ரூபா 36,540,437 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வங்கியில் காணப்பட்ட மேலதிகப்பற்று மீதிக்காக மேலதிகப்பற்று வட்டி செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் காசுப் புத்தகத்தில் காட்டப்பட்ட மீதிக்காக அல்ல என்பது குறிப்பிடப்படுகின்றது. | வங்கி மேலதிகப்பற்று உரிய எல்லையை விஞ்சாதவாறு பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 501,164,672 நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 188,800,669 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 689,965,341 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்காக அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 479,000,000 தொகையான மானியம் இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டிற்கான நட்டம் படிப்படியாக குறைவடைந்து 2018 ஆம் ஆண்டில் ரூபா 188,800,669 இலாபத்தை அடைந்திருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் இது ரூபா 501,164,672 நட்டத்தை அடைந்திருந்தது. எனினும் நிதி விளைவுகளிற்கு ஆளணி வேதனங்கள், அரசாங்க வரிகள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை சீராக்கியதன் பின்னர் 2018 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு ரூபா 1,325,002,743 ஆக இருந்ததுடன் இது மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 870,837,284 வரை அதாவது 34 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| விகிதம் | 2019 | 2018 | 2017 | 2016 |
| --- | --- | --- | --- | --- |
| மொத்தலாப விகிதம் (சதவீதம்) | 1 | 13 | 17 | 17 |
| தேறியலாப விகிதம் (சதவீதம்) | (27) | 11 | (10.9) | (13.6) |
| நடைமுறை விகிதம் (தடவைகள்) | 1 | 2 | 1.67 | 1.98 |
| விரைவு விகிதம் (தடவைகள்) | 1 | 1 | 1.40 | 1.62 |

கூட்டுத்தாபனத்தின் மொத்தலாப விகிதம் மற்றும் தேறியலாப விகிதம் என்பன மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் நடைமுறை விகிதம் படிப்படியாக குறைவடைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ 38 ஆண்டுகளாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் இயங்குகின்ற பௌத்தலோகா மாவத்தை, கொழும்பு 7 இல் அமைந்துள்ள உயர் பெறுமதியையுடைய கட்டிடம் மற்றும் 8 ஏக்கர் பரப்பளவுடைய காணியின் சட்ட ரீதியான உரிமைத்துவம் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் அவ் ஆதனத்தின் பெறுமதியை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016.02.24, 2018.05.09 மற்றும் 2020.07.16 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் இது தொடர்பாக அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அக் கலந்துரையாடல் நாளதுவரை நடாத்தப்பட்டிருக்காததால் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்தது. | சட்டரீதியான உரிமைத்துவம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் அப் பெறுமதி கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நேரடி நிகழ்ச்சித்திட்டமொன்று (live programme) அரைவாசியில் நிறுத்தப்பட்டதன் காரணமாக மனித உரிமைகள் மீறப்படுதல், தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்புவதற்காக அமைச்சிற்கு செலுத்தப்பட வேண்டிய வரி செலுத்தப்படாமை, குறைந்த எண்ணிக்கையான அத்தியாயங்களை (episodes) ஒளிபரப்பியதன் பின்னர் நாடகம் ஒளிபரப்புச் செய்வதை நிறுத்துதல் போன்ற காரணங்களினால் வெளித்தரப்பினர்களினால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக பதினேழு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அதில் 10 வழக்குகள் தொடர்பாக வாதியால் கோரப்பட்டிருந்த இழப்பீட்டுத் தொகை ரூபா 844,120,000 ஆக காணப்பட்ட போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இவ் வழக்குகள் தொடர்பாக வழக்கறிஞர் கட்டணங்களாக ரூபா 6,465,670 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | நட்டங்கள் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட வேண்டியிருக்காததால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கூட்டுத்தாபனம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 கடன்பட்டோர்களிற்கெதிராக வழக்குகளை தாக்கல் செய்திருந்ததுடன் ரூபா 25,093,207 தொகையை அறவிடுவதற்கு எதிர்பார்த்திருந்தது. மேலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழக்கறிஞர் கட்டணங்களாக ரூபா 1,521,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவைநாடும் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 25,093,207 தொகையை அறவீடு செய்வதற்காக சில நீதிமன்றங்களில் வழக்குகளை தொடுத்திருந்தது. | நட்டங்கள் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட வேண்டியிருக்காததால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | "Ira andurupata" பெயரிலான நேரடி நிகழ்ச்சித்திட்ட ஒளிபரப்பு 2008 நவம்பர் 04 இல் அரைவாசியில் நிறுத்தப்பட்டதன் காரணமாக மனித உரிமைகள் மீறப்பட்டிருந்ததென குறிப்பிட்டு இழப்பீடாக ரூபா 1,000,000 தொகையை கோரி கூட்டுத்தாபனத்திற்கு எதிராக இரண்டு தனிப்பட்டவர்கள் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தனர். கோரப்பட்டிருந்த இழப்பீட்டுத் தொகையை விஞ்சி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்டக் கட்டணங்களாக ரூபா 1,608,150 தொகை செலவிடப்பட்டிருந்தது. | அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட வழக்கறிஞர் கட்டணங்கள் 2009 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அனைத்து வழக்கு விசாரணைகளிற்கும் உரியதாகும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். | நட்டங்கள் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட வேண்டியிருக்காததால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையால் நடாத்தப்படுகின்ற சீட்டிழுப்பு நிகழ்ச்சியை ஒளிபரப்பு செய்வதற்கான தனியுரிமை அதிகாரம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தால் உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் சீட்டிழுப்பு நிகழ்ச்சியை ஒளிபரப்பு செய்வதற்கான வான்காலம் தனியார் முகவர்களுடாக அவ் 2 நிறுவனங்களால் ஒதுக்கப்பட்டிருந்தன. ஆகையால் லொத்தர் சபையிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு பெறப்பட்ட வருமானத்தில் 15 சதவீத தரகு இடைத்தரப்பினரிற்கு செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் இதற்கு | தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையால் முகவர்களுடாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு சீட்டிழுப்பு நிகழ்ச்சி வழங்கப்பட்டிருந்தது. ஆகையால் இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனம் இது தொடர்பாக நேரடியாக தலையீடு செய்ய முடியாதிருந்தது. மேலும் முகவர்களின்றி கூட்டுத்தாபனத்திற்கு நேரடியாக முழுத்தொகையையும் | முகவர்களின் தலையீடின்றி நேரடியாக சீட்டிழுப்பு நிகழ்ச்சியை ஒளிபரப்பு செய்வதை கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர்களிற்கு தரகுகள் செலுத்தப்பட வேண்டியிருந்தன. தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 687,561,590 ஆக இருந்ததுடன் அவ் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு முகவர் தரகு மற்றும் சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர் தரகாக முறையே ரூபா 103,134,239 மற்றும் ரூபா 11,278,668 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. | வழங்கும் பொருட்டு 2020.07.07 இல் லொத்தர் சபை இரண்டிற்கும் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | |
| (ஆ) | 1982 இன் 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் தொலைக்காட்சி அலைவரிசைகளை கண்காணிப்பதற்காக பணிப்புரைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 யூன் வரையிலும் அத்தகைய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | தொலைக்காட்சி அலைவரிசைகளை கண்காணிப்பதற்குத் தேவையான பணிப்புரைகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் போது கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் கட்டணமின்றி ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிற்கான 100 மணித்தியாலங்கள் மற்றும் 45 நிமிடங்களிற்காக கூட்டுத்தாபனத்திற்கு எந்தவொரு வருமானமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுமதி ரூபா 27,889,000 ஆகும். | பதில் வழங்கப்படவில்லை. | நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கட்டணங்களை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சால் ஒழுங்குபடுத்தப்பட்ட மக்களிற்குக் கையளிக்கப்பட வேண்டிய Gam Udawa மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்ட விளம்பரத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா | பதில் வழங்கப்படவில்லை. | நிகழ்ச்சித்திட்டங்களை விளம்பரம் செய்தல் தொடர்பாக கட்டணங்களை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 103,550,000 வான்கால வருமானம் 2020 யூன் மாதம் வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. விளம்பரங்களை ஒளிபரப்புவது தொடர்பாக வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுடன் முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன் அவ் விளம்பரங்களை காலத்திற்குக் காலம் ஒளிபரப்பு செய்வதற்காக சில தரப்பினர்கள் கோரிக்கைகளை விடுத்திருந்த போதிலும் அக் கோரிக்கைகளின் முறையான தன்மை சிக்கலானதாக காணப்பட்டது. | | |
| (உ) | தனியார் நிறுவனமொன்றுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் Earth Watchman செயற்திட்டம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆரம்பித்தல் நிகழ்ச்சி மாத்திரம் இடம்பெற்றிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தால் ரூபா 1,720,035 தொகை செலவிடப்பட்டதன் பின்னர் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்கு பெறப்பட்ட அனுசரணை ரூபா 1,250,000 மாத்திரமேயாகும். முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமல் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 470,035 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்த தரப்பினர்களிடமிருந்து நட்டம் அறவிடப்பட வேண்டும். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் மொத்த எண்ணிக்கையானது 1,041 நிரந்தர மற்றும் 8 ஒப்பந்த அடிப்படை பதவியணியினர் உள்ளடங்கலாக 1,049 ஆக | கூட்டுத்தாபனத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1041 நிரந்தரமானதாகவும் 08 ஒப்பந்த அடிப்படையானதாகவும் காணப்பட்டதுடன் முன்னர் பதவியணியானது 898 நிரந்தரமானதாகவும் 19 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட போதிலும் அத் திகதியிலுள்ளவாறு சேவையில் பணியாற்றுகின்ற உள்ளபடியான நிரந்தர பதவியிணியினர் 898 மாத்திரமேயாகும். அத்துடன் அத் திகதியிலுள்ளவாறு அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் 32 ஆகும். அதற்கிணங்க பல்வேறு நிரந்தரப் பதவிகளில் 159 வெற்றிடங்கள் காணப்பட்டது. மேலும் 05 பதவிகள் பதிற்கடமை அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்தன. | ஒப்பந்த அடிப்படையானதாகவும் 13 கடமைப்பொறுப்பு ஒதுக்கப்பட்டவையாகவும் காணப்பட்டன. ஐந்து பதிற்கடமை பதவிகள் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. பதிற்கடமைப் பதவியொன்று முடிவுறுத்தப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2011 யூன் 30 ஆம் திகதிய டிஎம்எஸ்/ஈ4/37/4/231/1-1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் கூட்டுத்தாபனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்காத 15 பதவிகளிற்கு இருபத்தொன்பது நிரந்தர ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் பதின்மூன்று ஊழியர்களும் பணி ஒதுக்க அடிப்படையின் கீழ் 03 உத்தியோகத்தர்களும் நியமனம் செய்யப்பட்டிருந்தனர் | பதில் வழங்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2018 ஒக்தோபர் 01 இலிருந்து வெற்றிடமாக உள்ளதுடன் 2020 செப்தெம்பர் மாதம் வரையிலும் அப் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 யூன் மாதத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் சனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின் அறிவிப்பு காரணமாக ஆட்சேர்ப்பு தாமதமடைந்திருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |